**செப்டம்பர் – 07**

# TNPSC துளிகள்

- ஜப்பான் போஸ்ட் வங்கி, அதன் வைப்புத்தொகையாளர்களுக்கு டிஜிட்டல் நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான வசதியை மேம்படுத்துவதற்காக, 2026 ஆம் நிதியாண்டின் இறுதிக்குள் டிஜிட்டல் யென் வசதியை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பின் கீழ் இந்தியப் பசுமைக் கட்டிடச் சபையிடமிருந்து பசுமை நகர பிளாட்டினம் சான்றிதழைப் பெற்ற முதல் நகரமாக மத்தியப் பிரதேசத்தின் இந்தூர் மாறியது.
- அமெரிக்காவுடன் இணைந்து நடத்தப்படும் 21வது யுத் அபியாஸ் கூட்டு இராணுவப் பயிற்சியில் இந்தியா பங்கேற்கிறது.
- அமெரிக்காவின் புளோரிடாவில் நடைபெறும் பிக்கில்பால் உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியா அதிகாரப்பூர்வமாக பங்கேற்க உள்ளது.
    - இந்திய பிக்கில்பால் சங்கம் (IPA) ஆனது, முதன்முதலில் தேசிய பிக்கில்பால் பந்து அணிக்கான தேர்வு சோதனைகளை அகமதாபாத்தில் நடத்தியது.
- பாரிசு நகரில் 2025 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது பேட்மிண்டன் உலகக் கூட்டமைப்பு (BWF) அறிவித்தபடி, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பேட்மிண்டன் உலக சாம்பியன்ஷிப் போட்டியானது புது டெல்லியில் நடத்தப்படும்.
    - இந்தப் போட்டியானது, 17 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவிலும் 4 ஆண்டுகளுக்குப் பிறகு ஆசியாவிலும் நடத்தப்பட உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நீலகிரியின் மாவட்ட மலர்




- நீலகிரி லில்லியின் வளங்காப்பிற்கு உதவும் வகையில் நீலகிரியின் 'மாவட்ட மலர்' ஆக அதனை அறிவிக்க சூழலியல் வல்லுநர்கள் மற்றும் தாவரவியலாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- நீலகிரி லில்லி (லிலியம் வாலிச்சியானம் வர். நீல்கெரென்ஸ்) ஆனது நீலகிரி மற்றும் பழனி மலைகளில் மட்டுமே காணப்படுகிறது.
- இது உயரமான புல்வெளிகளில் ஆகஸ்ட் மாத இறுதியில் மூன்று வாரங்கள் மட்டுமே பூக்கும்.
- மேய்ச்சல், அயல் இனங்கள் மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக அதன் எண்ணிக்கை குறைந்து வருகிறது.
- விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பை அதிகரிக்க நீலகிரியின் மாவட்ட மலராக அதனை அறிவிக்க நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.
- முன்னதாக மணிப்பூர் அதன் வளங்காப்பிற்காக ஷிருய் லில்லியை அதன் மாநில மலராக அறிவித்தது.

## சென்னையின் ஆரம்பகாலப் பெயர்கள்

- மதராசப் பட்டணம் என்ற பெயரானது 1639 ஆம் ஆண்டில் வெங்கடாத்ரி நாயக்கரின் நிலக் கொடையில்/மானியத்தில் மெட்ராஸ்பட்டம் என்ற துறைமுகத்தைக் குறிப்பிடும் வகையில் முதன்முதலில் குறிப்பிடப்பட்டது.
- இந்த மானியம் மொழி பெயர்க்கப்பட்டு H.D. லவ் எழுதிய பழைய Vestiges of Old Madras என்ற புத்தகத்தில் ஆங்கிலேயர்கள் வந்த இடமாக பதிவு செய்யப்பட்டது.
- 1645 ஆம் ஆண்டில், சந்திரகிரியைச் சேர்ந்த இராஜா ஸ்ரீரங்க ராயர் மதராசப் பட்டணத்தைச் சுற்றியுள்ள பிரிட்டிஷ் நிலத்தையும் பின்னர் நரிமேடு என்று அழைக்கப் பட்ட பகுதியையும் வழங்கினார்.
- ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட கோட்டைக்கு இராஜா தனது பெயரிடப்பட்டதாக நம்பினார் என்பதோடு மேலும் அது "ஜெரா ரெங்க ராயப்பட்டம்" என்று குறிப்பிடப் பட்டது.
- இந்த சமயத்தில், அதிகாரப்பூர்வ பதிவுகளிலோ அல்லது மானியங்களிலோ சென்னப் பட்டினம் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.
- H.D. லவ், புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்ட நிலத்தின் பெயர் சென்னப்பட்டினம் என்று ஊகித்தார்.
- 1673 ஆம் ஆண்டில், மதராசப்பட்டணம் ஆனது கோட்டையின் வடக்கே அமைந்துள்ள "தட்டையான வீடுகளைக் கொண்ட இந்திய நகரம்" என்று விவரிக்கப்பட்டது.
- சென்னப்பட்டணம் முதன்முதலில் 1646 ஆம் ஆண்டில் துப்பாக்கி வெடி மருந்துத் தூள் தயாரிப்பாளரான நாகபட்டன் சென்னகேசவப் பெருமாள் கோயிலுக்கு அளித்த நன்கொடையில் பதிவு செய்யப்பட்டது.
- இந்தக் கோயில் ஆனது தற்போது சென்னை உயர்நீதிமன்றம் அமைந்துள்ள பழைய பிளாக் டவுன் எனப்படும் தமிழர்கள் வாழ்ந்த பகுதியில் அமைந்திருந்தது.
- 1648 ஆம் ஆண்டில், இந்தக் கோயிலைக் கட்டிய பெரி திம்மப்பா, அதன் இருப்பிடத்தை சென்னப் பட்டணம் என்றும் பதிவு செய்தார்.
- 1672 ஆம் ஆண்டில், கோல்கொண்டா ஆட்சியின் கீழ் நெக்னம் கானின் நிலக் கொடையில் மதராசப் பட்டத்திலிருந்து தனித்து அமைந்த "சீனப்பட்டம் கோட்டை மற்றும் நகரம்" குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த நகரம் சீனப்பட்டம் என்ற பெயரில், கோட்டையுடன் சேர்த்து பிளாக் டவுன் போன்ற பகுதிகளையும் உள்ளடக்கத் தொடங்கியது.
- 1802 ஆம் ஆண்டில், கர்னல் கொலின் மெக்கன்சியுடன் பணிபுரிந்த C.V. போரியா, நகரத்தின் நான்கு பகுதிகளை விவரிக்கும் மராத்தியக் கையெழுத்துப் பிரதியைக்

கண்டுபிடித்தார்.

- அந்த ஆவணத்தில் அந்தப் பகுதிகளுக்கு மதராஸ் குப்பம், சென்னைக் குப்பம், அர்கூப்பம் மற்றும் மாலேபுட் என்று பெயரிடப்பட்டது.
- கோட்டை கட்டப்பட்ட இடம் மதராஸ் குப்பம் என்றும், சென்னைக் குப்பம் முத்தியால் பேட்டையாகவும் மற்றும் பாக்டல்பேட்டையாகவும் (ஜார்ஜ் டவுன்) ஆனது.
- கூவம் நதியின் முகத்துவாரத்திற்கு அருகில் அர்கூப்பம் அமைந்திருந்தது என்பதோடு மேலும் மாலேபுட் தொண்டையார் பேட்டை (சால்ட் கோடார்ஸ்) பகுதிக்கு அருகில் இருந்தது.
- இந்தக் கையெழுத்துப் பிரதி, கோட்டை மதராஸில் இருந்ததாகவும், நகரம் சென்னை என்றும் கூறி முந்தைய கருத்துக்களை மாற்றியது.
- அப்போதிருந்து, மதராஸ் ஆங்கில மொழிப் பெயராகவும், சென்னை தமிழ் பெயராகவும் பார்க்கப்பட்டது இருப்பினும் சில ஆதாரங்கள் அந்தப் பெயர் தெலுங்கு மொழி என்று கூறுகின்றன.
- இந்த வடிவமானது, பின்னர் அதிகாரப்பூர்வப் பதிவுகளில் இந்த நகரத்தை மதராசிலிருந்து சென்னை என்று மறுபெயரிடுவதை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப் பட்டது.





# தேசியச் செய்திகள்

## பால் வாடிகா DTH ஊடகம்

- NCERT ஆனது அதன் 65வது ஸ்தாபன நாளில் 35 என்ற ஊடக எண் கொண்ட பால் வாடிகா PM இ-வித்யா DTH ஊடகத்தினை அறிமுகப்படுத்தியது.
- இந்த ஊடகமானது, 3 முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், ஆசிரியர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான ஒலி ஒளிக் காட்சி உள்ளடக்கத்தை வழங்குகிறது.
- 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையின் படி, குழந்தைப் பருவத்தில்

அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை மேம்படுத்துவதே இதன் இலக்காகும்.

- NCERT ஆனது 12 மொழிகளில் செயற்கை நுண்ணறிவு அம்சங்கள் மற்றும் கற்றல் கருவிகளுடன் DIKSHA 2.0 உரையாடு மென்பொருள் தளத்தினை அறிமுகப்படுத்தியது.
- மாற்றுத்திறனாளிகள் பரிசோதனைக்கான PRASHAST 2.0 மற்றும் டிஜிட்டல் கற்றலுக்கான PM eVidya கைபேசி செயலி ஆகியவை பிற முக்கிய வெளியீடுகளில் அடங்கும்.




## BHARATI முன்னெடுப்பு




- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது BHARATI முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- ஏற்றுமதி மேம்பாட்டிற்கான இந்தியாவின் வேளாண் தொழில்நுட்பம், நெகிழ் தன்மை, முன்னேற்றம் மற்றும் தொழில் காப்பு மையத்தை BHARATI குறிக்கிறது.
- புதுமை மற்றும் ஏற்றுமதி தயார்நிலையை ஊக்குவிப்பதன் மூலம் 100 வேளாண் தொழில்நுட்பம் மற்றும் வேளாண் உணவு சார் புத்தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முக்கியக் கவனம் செலுத்தும் பகுதிகளில் புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகள், இயற்கை முறை உணவுகள், அதி ஊட்டம் மிக்க உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் ஆயுஷ் சார்ந்தப் பொருட்கள், செயற்கை நுண்ணறிவு, தொடர் சங்கிலித் தொழில்நுட்பம் மற்றும் இணைய உலகம் (IoT) போன்ற தொழில்நுட்பம்

ஆகியவை அடங்கும்.

### மின்சாரப் பேருந்தின் பயன்பாட்டு ஏற்பு 2025

- ஒடிசா அரசானது அதன் நகர்ப்புறங்களில் 450 மின்சாரப் பேருந்துகளை இயக்கி உள்ளதுடன், மின்சாரப் பேருந்துப் பயன்பாட்டில் இந்தியாவில் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்த மாநிலமானது, மின்சாரப் பேருந்துப் பயன்பாட்டில் மேற்கு வங்காளம் (391), ஆந்திரப் பிரதேசம் (238), சத்தீஸ்கர் (215) மற்றும் ஜார்க்கண்ட் (46) ஆகியவற்றை விஞ்சி உள்ளது.
- தற்போது வரை, இந்தியா முழுவதும் 14,329 மின்சாரப் பேருந்துகள் இயக்கப் படுகின்றன.
- டெல்லி (3,564), மகாராஷ்டிரா (3,296), கர்நாடகா (2,236), மற்றும் உத்தரப் பிரதேசம் (850) ஆகியவை முன்னணியில் உள்ளன.
- தலைநகரப் பிராந்திய நகர்ப்புறப் போக்குவரத்து (CRUT) கழகமானது PM-eBus Sewa மற்றும் PM e-Drive போன்ற திட்டங்கள் மூலம் சம்பல்பூர் மற்றும் பெர்ஹாம்பூர் உள்ளிட்ட புதிய நகரங்களுக்கு தனது சேவைகளை விரிவுபடுத்துகிறது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### விக்ரம் 3201

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பினால் (ISRO) முழுமையாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விக்ரம் 3201 என்ற அதன் முதல் 32-பிட் நுண்செயலாக்கச் சில்லினை / கருவியை இந்தியா அறிமுகம் செய்தது.
- இந்தச் சில்லானது/சிப் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று டெல்லியில் நடைபெற்ற ஒரு குறைக்கடத்தி தொழில்துறை நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 'விக்ரம் 3201' என்பது 2009 ஆம் ஆண்டு முதல் இஸ்ரோவால் பயன்படுத்தப்படும் 'விக்ரம் 1601' செயலியின் மேம்படுத்தப்பட்ட வடிவமாகும்.
- இந்தச் செயலியானது செயற்கைக்கோள்கள் மற்றும் விண்வெளி அமைப்புகளில் பயன்படுத்தப் படும் அடா நிரலாக்க மொழியை ஆதரிக்கிறது.
- உள்ளார்ந்த விண்வெளிப் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ள இது, மைனஸ் 55

முதல் 125 டிகிரி செல்சியஸ் வரையிலான வெப்பத்தில் செயல்படும் திறன் கொண்டது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### சென்னா ஸ்பெக்டபிலிஸ் ஊடுருவல்


- 1980 ஆம் ஆண்டுகளில், வேகமாக வளரும் மரமான சென்னா ஸ்பெக்டபிலிஸ் தென் அமெரிக்காவிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தை ஆக்கிரமித்து, பூர்வீகத் தாவரங்கள் மற்றும் வனவிலங்கு வாழ்விடங்களைச் சீர்குலைத்துள்ளது.
- கேரளாவின் வயநாடு வனவிலங்குச் சரணாலயம் இந்தியாவின் முதல் அறிவியல் அடிப்படையிலான, சமூகம் தலைமையிலான ஒழிப்பு முயற்சியை மேற்கொண்டது.
- நாகர்ஹோலே புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள DB குப்பே வனச் சரகம் வரையில் இதன் அகற்றல் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக Forest First Samithi அமைப்பானது கர்நாடகா அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- தமிழ்நாடு மாநிலமும் இதே போன்ற அகற்றும் திட்டங்களை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகளை செய்து வருகிறது, அதே நேரத்தில் ஆந்திரப் பிரதேசம், கோவா மற்றும் மகாராஷ்டிரா போன்ற பிற மாநிலங்களில் ஆரம்ப கட்ட சென்னா மரப் பரவல் உள்ளதாகப் பதிவாகியுள்ளன.
- ஒவ்வொரு சென்னா மரமும் ஒரு பருவத்திற்கு 6,000 விதைகளை உற்பத்தி செய்யக் கூடியது என்பதோடு இந்த விதைகள் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு முளைப்பதற்கான சாத்தியக் கூறினைக் கொண்டவை மற்றும் அகற்றப்பட்ட விறகுகளிலிருந்து கூட மீண்டும் வளரக் கூடியவை.
- ஒரு சோதனைத் திட்டம் ஆனது 6,000 டன் அகற்றப்பட்ட சென்னா மரப் பொருட்களை காகிதக் கூழாக மாற்றியது இருப்பினும் அதன் பரவலைத் தடுக்க முழு வேர்

அகற்றுதல் அவசியம் என்று சூழலியல் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

- ரஃபோர்ட் அறக்கட்டளையின் 2021 ஆம் ஆண்டு ஆய்வில், சென்னா மரம் வயநாடு வனவிலங்குச் சரணாலயத்தின் 23 சதவீதத்தை ஆக்கிரமித்துள்ளது என்பதோடு அதன் பரவல் மேலும் அதிகரித்துள்ளது.




## வனச் சட்டத்தின் மீறல்




- தேனி மாவட்டத்தில் வன அனுமதி இல்லாமல் சமீபத்தில் மூன்று சாலைகள் அமைக்கப் பட்டன.
- இந்தச் சாலைகள் மயிலாடும்பாறை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி வழியாகச் செல்வதால், 1980 ஆம் ஆண்டு வனச் (பாதுகாப்பு) சட்டத்தினை மீறுகின்றன.
- சுற்றுச்சூழல் ரீதியாக பலவீனமான இந்தப் பாதையில் முக்கியமாக புலி, யானை மற்றும் சிறுத்தை வாழ்விடங்களை அச்சுறுத்தும் கட்டுமானங்கள் உள்ளன.
- வளங்காப்பகத்திற்குள் குறைந்தது 12 சாலைத் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது என்பதோடு இது கடுமையான வளங்காப்பு கவலைகளையும் எழுப்புகிறது.

- மேகமலை புலிகள் காப்பகம், கேரளாவில் உள்ள பெரியார் புலிகள் காப்பகத்தை தமிழ்நாட்டின் காடுகளுடன் இணைக்கும் ஒரு தாழ்வாரத்தின் ஒரு பகுதியாகும்.

## பசுமை வரவுத் திட்டம்




- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆனது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதியன்று பசுமை வரவுத் திட்ட முறையை திருத்தியமைத்தது.
- மரம் வளர்ப்பதற்கான பசுமை வரவுகள் ஆனது தற்போது ஐந்து ஆண்டுகள் மறு சீரமைப்புப் பணிகள் மற்றும் குறைந்தபட்சம் 40 சதவீத அடர்த்தியை அடைந்த பின்னரே வழங்கப்படும்.
- மீட்டெடுக்கப்பட்ட வன நிலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வளரும் ஒவ்வொரு மரத்திற்கும் ஒரு பசுமை வரவு வழங்கப்படும்.
- இந்தப் புதிய விதிகள் ஆனது, நடப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உடனடி வரவுகளை அனுமதித்த 2024 ஆம் ஆண்டு அறிவிப்பை மாற்றுகின்றன.
- பசுமை வரவுகள் ஆனது தற்போது வர்த்தகம் செய்ய முடியாதவை மற்றும் வரவினைக் கொண்டுள்ள ஒரு நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்கு இடையேயான மாற்றங்கள் தவிர, மற்றவை இடையே மாற்ற முடியாதவையாக மாற்றப்பட்டுள்ளன.
- புதிய அமைப்பின் கீழ் பசுமை வரவுகள் வழங்கப்படுவதற்கு முன்பு நியமிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் சரிபார்ப்பு மற்றும் உரிமை கோரல் அறிக்கையைப் பெறுதல் கட்டாயமாகும்.

# மாநிலச் செய்திகள்

## இராஜ்ய ஜீவிகா நிதி சாக் சஹ்காரி சங்கம்




- பிரதமர் பீகார் இராஜ்ய ஜீவிகா நிதி சாக் சஹ்காரி சங்க லிமிடெட் நிறுவனத்தை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று தொடங்கி வைத்தார்.
- சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் நிறுவன மேம்பாட்டிற்காக சரியான நேரத்தில் மற்றும் மலிவு விலையிலான கடன் வழங்குவதை உறுதி செய்வதே இந்த நிறுவனத்தின் நோக்கமாகும்.
- ஜீவிகாவுடன் தொடர்புடைய சமூக உறுப்பினர்களுக்கு அணுகக் கூடிய/மலிவு வட்டி விகிதங்களில் நிதியை எளிதாக அணுக இந்த நிறுவனம் உதவும்.
- இந்த முன்னெடுப்பானது, நிதி உதவி மூலம் வணிக விரிவாக்கத்தைச் செயல் படுத்துவதன் மூலம் கிராமப்புறப் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி 2025

- கஜகஸ்தானின் ஷிம்கென்ட் நகரில் நடைபெற்ற 16வது ஆசியத் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 50 தங்கப் பதக்கங்களை வென்றது.
- முதல் முறையாக ஒட்டு மொத்தப் பதக்கப் பட்டியலில் முன்னிலையைப் பெற்றதுடன், இந்தப் போட்டியில் இந்தியா வென்ற அதிகபட்ச தங்கப் பதக்க எண்ணிக்கை இதுவாகும்.
- இந்தியா 26 வெள்ளி மற்றும் 23 வெண்கலம் உட்பட மொத்தம் 99 பதக்கங்களுடன் கஜகஸ்தான் மற்றும் சீனாவை விட முன்னேறியுள்ளது.
- ஆடவருக்கான டபுள் டிராப் போட்டியில் அங்கூர் மிட்டல் உலக சாதனைப் படைத்தார்; என்பதோடு அவரது ஆசிய சாதனையுடன் இளவேனில் வாளரிவன் தனது இரண்டாவது ஆசியப் பட்டத்தை வென்றார்.




## முக்கிய தினங்கள்

### தேசிய ஊட்டச்சத்து வாரம் 2025 – செப்டம்பர் 01 முதல் 07 ஆம் தேதி வரை

- இந்தியாவில், 1982 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் இது அனுசரிக்கப்படுகிறது.
- இது ஆரோக்கியமான உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்த கல்வியறிவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Eat Right for a Better Life" என்பதாகும்.




### உலக தேங்காய் தினம் 2025 - செப்டம்பர் – 02

- இத்தினமானது, தென்னையின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.
- ஆண்டுதோறும் சுமார் 67 பில்லியன் தென்னை உற்பத்தியுடன், 90க்கும் மேற்பட்ட நாடுகளில் 12.2 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் தேங்காய் சாகுபடி மேற்கொள்ளப் படுகிறது.

- 2025 ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Uncovering Coconut's Power, Inspiring Global Action" என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## ஜரோசைட் கனிமம்




- குஜராத் மாநிலத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள மத்தனோமத் கிராமத்தில் மஞ்சள் நிறத்தில் இரும்புச்சத்து நிறைந்த சல்பேட் கனிமமான ஜரோசைட் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தினர்.
- சுமார் 55 மில்லியன் ஆண்டுகள் மிகப் பழமையான ஜரோசைட் 2004 ஆம் ஆண்டில் நாசாவின் Opportunity ஆய்வுக் கலத்தினால் செவ்வாய்க் கிரகத்தில் கண்டுபிடிக்கப் பட்ட கனிமங்களை ஒத்திருக்கிறது.
- செவ்வாய் கிரகத்தைப் போன்ற புவியியல் சூழல்களைக் கொண்டுள்ள மத்தனோமத் தளம் ஆனது, இந்தியாவின் செவ்வாய்க் கிரக ஆய்வுக் கலமான மங்கள்யான்-2

கலத்திற்கு ஒரு சாத்தியமான சோதனைத் தளமாக அமைகிறது.

- புவியில் ஜரோசைட் உருவாக்கம் ஆனது எரிமலைச் செயல்பாடு மற்றும் தண்ணீருடன் இணைக்கப் பட்டுள்ளதோடு இது புவியின் கட்ச் மற்றும் செவ்வாய்க் கிரகத்திற்கு இடையிலான கடந்தகாலச் சுற்றுச்சூழல் ஒற்றுமைகளைக் காட்டுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★